FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

| தரம் :-13 (2019) | நாடகமும் அரங்கியலும் I | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1. 1 | 11. 1 | 21. 3 | 31. 4 |
| 2. 2 | 12. 3 | 22. 2 | 32. 4 |
| 3. 3 | 13. 2 | 23. 5 | 33. 2 |
| 4. 3 | 14. 4 | 24. 5 | 34. 2 |
| 5. 5 | 15. 2 | 25. 1 | 35. 3 |
| 6. 1 | 16. 1 | 26. 4 | 36. 3 |
| 7. 1 | 17. 1 | 27. 2 | 37. 4 |
| 8. 3 | 18. | 28. 2 | 38. 5 |
| 9. 2 | 19. 2 | 29. 3 | 39. 1 |
| 10. 5 | 20. 5 | 30. 3 | 40. 2 |

## பகுதி II (பகுதி A)

01.

1) ஒருவர் அல்லது பலர் சிலர்முன் கலைசார் விடயத்தை ஆற்றி/ செய்து காட்டுதல் ஆற்றுகைக் கலை எனப்படும்
ஆற்றுகைக்கு ஆற்றுவோர் பார்ப்போர் முதன்மை பெறுபவர் ஆற்றுகைக் கலைகளாக இசை, நடனம், நாடகம், சினிமா, பலே, கூத்து, வில்லுப்பாட்டு, களக்கூத்து என்பன அடங்கும்.

agaram.lk

2) மேலைத்தேய, கீழைத்தேய கலைக்கோட்பாட்டாளர் இருவரது கருத்தை முன்வைத்து விளக்குதல் வேண்டும்
உ – ம் எனது வீட்டில் உள்ள 2 விடயம்

3) ஆற்றுவோர் பார்ப்போர் தொடர்பு நாடக நாடகத்திற்குரிய பிரதான பண்பு இதுதான் இந்த உறவை விளக்குதல் வேண்டும். இருவரிலும் ஒருவர் இல்லை என்றால் நாடகம் இல்லை நடிகருக்கு பார்வையாளரும், பார்வையாளருக்கு நடிகரும் எதிர்பார்ப்பு கிடைத்தல் வேண்டும் என்பதை விளக்குதல் வேண்டும்.

02.

1) ஸ்ரனிஸ்லவஸ்கி
முறைமை (The system) எனும் நடிப்புக் கோட்பாட்டை முன்வைத்தார். பழைய பானியிலிருந்து புதிய நடிப்புப் பாணியைத் தோற்றுவித்தவர். நடிகர்களுக்கு ஆன்மீக ரீதியான திருப்தி தர முயன்றவர். அகவயம் சார்ந்த சித்திரிப்பிற்கு முதன்மை கொடுத்தவர். நடிகர்களுடைய சிருஷ்டித்துவம் மிக்க மனம் தான் சிருஷ்டித்துவம் மிக்க நடிப்பை கொண்டு வரும் என்று கண்டு கொண்டவர். கிருஸ்டித்துவம் மிக்க மனதை நடிகர்களிடம் உருவாக்கப் பத்து உளவியல் நுட்ப முறைகளைக் கையாண்டவர்.

2) பெத்தோல் பிறக்ட்
பேட்டோல்ட் பிரஸ்ட்டின் காப்பிய அரங்கு பேட்டோல்ட் பிரஸ்டின் காப்பிய அரங்கு என்பது யாது? அது பார்ப்பவரிடத்தே ஏற்படுத்தும் தாக்கத்தின் தன்மைகளை அவ்வரங்கிற்குரிய யாதேனுமொரு நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க. ஜேர்மனிய

நாடக ஆசிரியர், தயாரிப்பாளர், நெறியாளர், புதிய நாடகக் கொள்கை புதிய நடிப்புக் கோட்பாடு Aleanation அந்நியப் பாடல் இதற்காக கையாண்ட உத்திகள்.

- இடைவெட்டி வரும் பாடல்கள்.
- Non realistic scenasim
- Lighting பார்வையாளர்களுக்கும்
- நடிகர் பார்வையாளர்களுக்குள்ளால் வருதல்.
- துண்டுக் காட்சிகள்.

3) மேயர் கோல்ட்

- ரஷிய தேசத்தைச் சேர்ந்தவர்.
- நாடகத்தில் நிர்மாணவாதத்தைக் கொண்டு வந்தவர்.
- உயிர்ப்பொறிமுறை நடிப்பைத் தோற்றுவித்தவர்.
- உடலின் நிலைகளுக்கு ஊடாக உணர்ச்சிகளை முழுமையாக வெளிப்படுத்தல், உடல் நிலைகள், உடல் மொழி அன்றேல் இயக்கத்தினால் விளைவிக்கப்படுகின்ற நிலைகள், மனப்பாங்கின் ஊடாக எழும் மொழி போன்றவற்றினூடாக உணர்ச்சிகளை வெளிப்படுத்தலே இவரது கோட்பாடாகும்.

03. கிரேக்க அரங்கு.

- கிரேக்க அரங்க நிகழ்த்துகை திறந்த வெளியானது முக்கியம் பெற்றது.
- மலைகளைப் படிப்படியாகச் செதுக்கி பார்ப்போர் அமர்ந்து கொண்டு நிலமட்டத்தில் உள்ள ஒகஸ்ரா ஆடுகளம் எனும் இடத்தில் நிகழ்த்துகை இடம்பெற்றது.
- பார்ப்போர் அமரும் இடம், உடை மாற்றும் பகுதி உட்செல்லும் பாதை எம் இடங்களை உள்ளடக்கியுள்ளது.
- அதிக அளவான பார்ப்போர் கலந்து கொள்வர்.
- ஆற்றுகை பகலில் இடம்பெறும்.
- அளிக்கைக்கு ஏற்ப பல பொறிகள் பயன்படுத்தப்படும்.
- வேட, உடை, வேடமுகம் போன்றன அளிக்கையில் முக்கியம் பெற்று உள்ளன.

யப்பானிய கபுக்கி

- ஜப்பானிய கபுக்கி அரங்கு
- ஜப்பானில் காணப்படும் புராதன பாரம்பரிய நாடகவடிவம்.
- ஜனரஞ்சக நாடக மோடியைச் சார்ந்தது.
- பாடல், ஆடல், நடிப்பு இணைந்ததே கபுக்கி வடிவம்.
- மேலைத்தேய படச்சட்ட மேடையை உள்வாங்க (கணாமிச்சி) பால்ப்பாதையை இணைத்து வடிவமைத்தனர்.
- பார்ப்போர் இடம் (பெட்டி) இருக்கைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.
- மூடப்பட்ட உள்ளக அரங்கு.
- பிரதான அரங்கிற்கு முன் கணாமிச்சி எனும் நீண்ட பாலப்பாதை காணப்படும்

## பிரிவு B

04.

1) நடிகர் ஒன்றியம்

- 1970 ல் தேசிய மரபை தமிழ் மக்களுக்காக உருவாக்கும் முயற்சி.
- நா.சுந்தரலிங்கம், தாசிசியஸ், சிவாநந்தன், பத்மநாதன், மௌனகுரு போன்றவர்களால் உருவாக்கும்.
- நெல்லியடி அம்பலத்தாடிகள் குழு, மட்டக்களப்பு நாடகசபா, கூத்தாடிகள் குழு இணைந்து தோற்றம்.
- மரபு வழி நாடகங்கள், மோடிமை நாடகங்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள் எனப்பல நாடக வகைகளை நெறிப்படுத்தியமை.
- நாடகப் பயிற்சிகள், கலந்துரையாடல் நடத்தல்.
- பார்வையாளரிடம் நாடக இரசனையில் தரத்தை அதிகரித்தமை.

2) நாடக அரங்கக் கல்லூரி

- 1979 ல் குழந்தை சண்முகலிங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டது.
- சுயஆக்க நாடகத்தைத் தயாரித்தல்.
- நாடகப் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்கு, நாடகப் பட்டறைகள் நடத்தியமை.
- அரங்கம் சஞ்சிகை வெளியிடல்.



agaram.lk

3) திருமறைக் கலாமன்றம்

- நாடகப் பயிலரங்குகளை நடத்தி வருதல்.
- கூத்துருவ நாடகங்களை எழுதித் தயாரித்தல்.
- தனியாள் அரங்குகளை முன்னெடுத்தமை.
- கூத்து நூல்களை அச்சிட்டு வெளியிட்டமை.
- புதிய இசை நாடகங்கள் சிலவற்றை எழுதித் தயாரித்தல்.
- நாடகத்திற்கென ஆற்றுகை எனும் சஞ்சிகையினை வெளியிட்டு வரல்.

05. 1) நிருத்த – ஆட்டங்களை மாத்திரம் கொண்டது. வெறும் நடனம்
நிருத்திய – ஆட்டத்தை பிரதானப்படுத்திய பாவ வெளிப்பாடு. இதனையே பரத நிருத்தியம் என கூறுகின்றனர். பத்மா பரத நாட்டியம் எனக்கூறலாமா?
நிருத்தியம் - நாட்டியம், நாடகம்.

2) லோக தர்மிப

1. இயல்பான கதை
2. தொல்காப்பியம் உலகியல் வழக்கு என்கிறது.
3. பாத்திரங்களின் இயல்பான நடத்தையை காட்டுவது.
4. இயல்பான அபிநயங்களைக் கொண்டது.
5. போலித்தன்மை அற்றது.

நாட்டிய தர்மி

1. இயல்பற்ற கதை.
2. தொல்காப்பிய நாடக வழக்கு என்கிறது.
3. மோடியற்ற அங்க அசைவுகளைக் கொண்டது.
4. ஒரு பாத்திரத்தை பலர் ஏற்று நடிப்பர்.
5. உரையாடல் பாடல் லயத்தில் அமைதல்.

06. 1) கதாசிஸ்
வெளிக் கொணர்கை நடிப்பவரைப் பார்த்து பார்ப்பவரில் ஏற்படும் உணர்வு வெளியேற்றம். உணர்வுகள் பிரதானம் பரிவு பயம் என்பன. கிரேக்க அவலச்சுவை நாடகங்களைப் பார்க்கும் போது ஏற்படுவது என அரிஸ்ரோட்டில் கூறியுள்ளார்.

agaram.lk

2) ஹணாமிச்சி
யப்பானிய நாடக மரபில் கபுக்கி அரங்கில்வரும் பூம்பாதை (குடமறத யவாத) என்பதாகும். இதன் வழியே நடிகர் வந்து போவர்.

3) தெருவெளி அரங்கு

- சமூகக் குழுமங்கள் பல்வேறு மோதுகைநிலைப் பிரச்சினைகளை எதிர்நோக்கிய சூழலில் தோற்றம் பெற்றது.
- பிரச்சினை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதே ஆற்றுகையின் நோக்கமாகும்.
- சிறுவர் முதல் பெரியவர் வரை இதன் பார்ப்போர் ஆவார்.
- ஆற்றுகை முறைமை வேகமும், நேரச் சுருக்கமும், கவர்ச்சியும், வியப்பூட்டலும் நிறைந்தது.
- தமது பிரச்சினைகள் பற்றிப் பேசும் போது மிகவும் ஆர்வத்தோடு தொடர்பு கொள்ளும் முறைமை காணப்படும்.

4) சிகிச்சை அரங்கு

- ★ சிகிச்சை அரங்காகத் தொழிற்படும் அரங்கின் பிரயோகம் வெளிப்பாடு ஆற்றுவோர், பார்ப்போர் தெளிவு பெறுதல் துலக்கமாக்கப்பட வேண்டும்.
- ★ சிகிச்சை முறைக்கான கருவியாகத் தொழிற்படும் முறைமை தெளிவுபடுத்தப்பட வேண்டும்.
- ★ சிகிச்சையாகத் தொழிற்படும், அரங்க நடவடிக்கையானது ஆற்றுகைநிலையிலும் பயிற்சிப் பட்டறை நிலையிலும் இயங்குகின்றது.

5) சிறுவர் அரங்கு

- சிறுவர் நாடக ஆசிரியர்களில் குழந்தை சண்முகலிங்கம் அவர்களை கூறுவதுடன் கூடிவிளையாடு பாப்பா நாடகத்தைக் கூறுதல் வேண்டும்.
- நாடகத்தின் ஒரு விடயம் அம்சங்கள் என்பன கூறப்பட வேண்டும்.
- வர்ணம், பெருங்காட்சி, இசை, ஆடல், பாடல், வேடமுகம் என்பன பற்றி கூறவேண்டும்.
- சிறுவர் உளவியல் சார்தவையாக அமைதல் வேண்டும்.
- நடிகர், பார்வையாளர் எனும் போது சிறுவர் பெரியவர் இனங்காணப்படல் வேண்டும்.

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

| தரம் :-13 (2019) | நாடகமும் அரங்கியலும் II | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1. 5 | 11. 3 | 21. 1 | 31. 2 |
| 2. 2 | 12. 3 | 22. 5 | 32. 4 |
| 3. 4 | 13. 1 | 23. 4 | 33. 5 |
| 4. 1 | 14. 2 | 24. 1 | 34. 2 |
| 5. 3 | 15. 1 | 25. 3 | 35. 1 |
| 6. 4 | 16. 3 | 26. 2 | 36. 3 |
| 7. 5 | 17. 2 | 27. 3 | 37. 2 |
| 8. 4 | 18. 3 | 28. 1 | 38. 4 |
| 9. 5 | 19. 2 | 29. 2 | 39. 4 |
| 10. 1 | 20. 1 | 30. 2 | 40. 3 |

## பகுதி II - பகுதி A

01.

1)
- பெண் அடிமைத்தனம், ஆணாதிக்க மேம்பாடு
- கணவன் - மனைவிக்கிடையில் புரிந்துணர்வு இன்மை.
- கணவன் மனைவியின் நுட்பமான உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது அவளை வெறுமனே உடலும் உயிருமுள்ள பொம்மையாக மதிப்பது.

agaram.lk

2) நோறா

சாதாரண குடும்பப் பெண். கணவனுடன் சேர்ந்து வாழ விரும்புவள், பிள்ளைகளில் அன்பு கொண்டவள், மனநெகிழ்ச்சி உடையவள், உண்மையை இலகுவில் வெளியிடாதவள், பொய் உரைப்பவள். (இவற்றைக் கூறி நாடகத்தில் வரும் சம்பவங்கள் ஊடாக விளக்குக)

கிறிஸ்ரீனா

உண்மை கூறுபவள், இழந்த வாழ்க்கையைப் பெறுவதற்காக முயற்சித்தவள், மனநெகிழ்ச்சி உடையவள், சாதாரண ஒரு குடும்பப் பெண், நன்றி உள்ளவள் (இவற்றைக் கூறி நாடகத்தில் சரும் சம்பங்களைக் குறிப்பிடுக.

3) நத்தார் மரம், நல்ல கதிரை ஆடும் கதிரை, டாக்டர் ராங்கி கடிதம், அலங்கார உடை போன்வற்றுடன் (மேலும் சில சம்பவங்களை குறிப்பிட்டு விளக்குக.)

02.

1) துஷியந்தன், சகுந்தலை, துருவாசர், கண்ணுவர், அனசூயை, பிரியம் வதை

2) துஷியந்தன்

மனன், வேட்டையாடுவதில் வல்லவர், மற்றவை மதிக்கும் குணம் உள்ளவன், அழகானவன் பிள்ளைகளிடத்தில் விருப்பம் உள்ளவன், இறைபக்தி உடையவன், நாட்டு மக்களின் நலம் பேணுபவன், காதலின் பால் நாட்டமுடையவன்.

சகுந்தலை
அழகானவள், தன்னைச் சார்ந்தோரில் மிகுந்த விருப்பமுடையவள், இயற்கையை நேசிக்கும் அன்புடையவள், பறவை, மிருகங்களிடம் அன்புடையவள், சூழலுக்கு ஏற்ப சமாளிப்பவள்.

கண்ணுவர்.
மக்களிடம் மிகுந்த அன்புடையவர், மகளின் விருப்பத்தை மதிப்பவர்.

துருவாசர்.
முற்கோபக் காரர்.

அனசூயை, பிரியம்வதை
தம் தலைவி மீது அளவில்ல அன்புடையவர்கள், தலைவியின் நல்வாழ்வில் விருப்புக் கொண்டவர்கள், சகுந்தலையைத் தன் தலைவனிடம் சேர்த்து சந்தோசடாக அவள் வாழவேண்டும் என்ற விருப்புமுடையவர்கள்.

3) ஆரம்ப அறிமுகமாக பூர்வ அரங்கம் நிகழ்த்தப்படல்.
நாடகம் 5 வளர்ச்சிக் கட்டங்கள்.
ஆரம்பு, பிரியத்தன, பிரத்தியாச, நியாதாப்தி, பலாகம.
உதாரணங்களுடன் விளக்கல்.
கதைப்பின்னல் - டீஜ, பிந்து, பதாக, பிரகரி, காரீப்பி
கதாநாயகன், கதாநாயகி பெயர்கள் நாடகத்தலைப்பாதல்.
பிரதான சுவையாக சிருங்காரம் காணப்படல்
தன்னிகரில்லாத தலைவன்.
பறவை, விலங்குகளை நாடக உத்திகளாக்குதல்.
புராண இதிகாச கதைகளை கருவாகக் கொண்டிருத்தல்.
இன்பியல் முடிவு
உயர்ந்த மொழி (சமஸ்கிருதம்) உயர் நிலைப் பாத்திரங்கள் பேசும்.
நிலைப் பாத்திரங்கள் பேசும்.
சாதாரண மொழி (பிராகிருதம், பைசாசம்)
சாதாரண பாத்திரங்கள் பேசும்.

03.

1) ஈஸ்கலஸ் (கி.மு 525 – 456)
சோபோக்கிலிஸ் (கி.மு 496 – 406)
யூரிப்பீடிஸ் (கி.மு 484 – 407)

2) ஈஸ்கலஸ்
- நடிகர் எண்ணிக்கையை இரண்டாக மாற்றினார்.
- கோரசை 50 இல் இருந்து 15ஆக ஆக்கினார்.
- உரையாடல் தன்மையை அதிகரித்தல்.
- உடையலங்காரம், முகமூடி, மேடைக் காட்சியமைப்பை புகுத்தினார்.
- பாட்டு, ஆடம்பரம், ஸ்திரம், கவித்துவம் கொண்டதாக காணப்பட்டது.

சோபோக்கிலிஸ்
- நடிகர் எண்ணிக்கையை 3 ஆக மாற்றினார்
- கோரசை 15 ஆக மாற்றினாலும் நாடக நிகழ்வில் பார்வை குறைத்தார்.
- கதை எழிமையாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் ஆக்கினார்.
- விதியையும், பாத்திரத்தின் இயல்புகளையும் ஒன்றோடு ஒன்றுப் பின்னிப் பிணைய விட்டார்.

யூரிப்பிடிஸ்
- கிரேக்க அரங்கை தற்காலத்தை நோக்கி வளர்த்துச் சென்றார்.
- புராண கருத்தை தத்துவம் சார்ந்த கருத்தை வெளிப்படுத்தினார்.
- பாயிரம், அனுபந்தம் போன்ற உத்திகளை பயன்படுத்தினார்.
- கோரசை சிறிய அளவில் மட்டும் பயன்படுத்தினார்.
- அற்புத உத்திகளை அமைத்து சிக்கல்களை அவிழ்க்கும் முறையினை பயன்படுத்தினார்.

agaram.lk

3) 1. பிரதான பாத்திரத்தில் காணப்படும் ஏதோ ஒரு குறைபாடு ஹமாஷியா அதனுடைய நல்ல குணங்கள் எல்லாம் பயன்படாது அதனுக்கு எதிராகப் போகின்ற தன்மை இருக்கும்.
2. இறுதியின் அவலத்தின் இன்றியமையாத் தன்மை.
பாத்திரம் ஒரு நடவடிக்கைக்கு எடுக்க அந்த நடவடிக்கை இன்னொரு நடவடிக்கைக்கு இட்டுச்செல்ல அது 3 வது நடவடிக்கைக்கு இட்டுச் செல்லும். இது விதியின் செயற்பாடு (ஈடிபஸ் கிரேக்க அவலச்சுவை நாடகம் கொண்டு விளக்குக.)

## பிரிவு B

04.

1) மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு

2)
- சடங்குத் தன்மை காணப்படும்.
- ஆடல், பாடல் காணப்படும்.
- புராண இதிகாசங்களை கதைக்கருவாக கொண்டிருக்கும்.
- அண்ணாவி, கட்டிய காரன் பாத்திரம் காணப்படும்.
- எடுத்துரைக்கும் பண்பு கொண்ட அரங்காகும்.
- பார்த்திரங்களுக்கான வரவு தனித்துவமான ஆட்டம், ஆட்டக் கோலம் என்பன காணப்படும்.
- காப்புக் கட்டல், மங்களம் பாடுதல் என்பன காணப்படும்

3) கூத்தின் இன்றை நிலைபற்றி கூறுதல் வேண்டும்.
- பாடசாலைகளில் மட்டும் நடைபெறுகிறது.
- கத்தோலிக்க கரையோர கிராமங்களில் அரிதாக இடம்பெறல்.
- போன்ற விடயங்களை குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

agaram.lk

05. 1) வீரயுகக் காலம்
நிலப்பிரபுத்துவ காலம்
வணிகயுக காலம்.
கோயிற் பண்பாட்டுக் காலம்.
விஜயநகர நாயக்கர் காலம்.
ஐரோப்பியர் காலம்.
1947 க்குப் பிற்பட்ட காலம்.

2)
- சடங்கு
- அரசியல் செல்வாக்கு
- கலை இலக்கிய வளர்ச்சி
- கலைஞர்களின் செல்வாக்கு
- பொருளாதார வளர்ச்சி
- மதம் சார் செல்வாக்கு

3) மேற்குறிப்பிட்ட காலங்களுக்குரிய சிறப்பம்சங்களை கூறி விளக்குதல்.

06. 1) அர்ச்சுணன் தபசு
- மலையத்தில் நிகழ்த்தப்படும் சடங்கோடு தொடர்புடைய கூத்து வடிவம்.
- அர்ச்சுணன், சிவன், பாண்டவர்கள், பேரண்டச்சி போன்ற பாத்திரங்கள் இக்கூத்தில் காணப்படும்.
- மகாபாரக் கதையில் வரும் அருச்சுணன் தவம் செய்து பாசு பதாஸ்திரத்தைப் பெறுவதைப் பிரதான கதைப்பொருளாக் கொண்டு நிகழ்த்தப்படும்.
- தப்பு, சல்லரி போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படும்.
- மோடியுற்ற வேட உடை, ஒப்பனை காணப்படும்.
- தபசு மரம் 60 அடி வரை உயர்த்தப்பட்டதாக இருக்கும். அம்மரத்திலிருந்து அருச்சுணன் தவம் புரிவான்.

2) சொக்கரி

- சிங்களப் பாரம்பரிய கிராமிய நாடக வடிவம்.
- பாய் இழைக்கும் கின்னரய என்ற சாதியினர் நிகழத்துவர்.
- சிங்கள வருடப்பிறப்பை ஒட்டியதாக நிகழ்த்தப்படும்.
- வயல் வெளிக் களத்துமேட்டில் நடிக்கப்படும்.
- கரு வளச்சடங்கு.
- பத்தினி வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டது.
- அங்கதச் சுவை மோலோங்கிக் காணப்படும்.
- தமிழரின் மகிடிக்கூத்துடன் ஒப்பிடக் கூடியது.

3) உடக்குப் பாஸ்

- சடங்காக நிகழ்த்தப்படும்.
- பாஸ்கு – பாசுக்க என்று அழைப்பர்.
- மன்னார் பேசாலையின் இன்று வரை நிகழ்த்தப்பட்டு வருகிறது.
- இதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட அரங்கு பேசாலையில் உள்ள தேவாலயத்தில் உள்ளது.
- இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய விடயங்களைக் கொண்டிருக்கும்.

4) ரட்டயக்கும

- தென்மாகாணத்தில் பிரபல்யம் பெற்றது.
- பெண்கள் தொடர்பான சடங்கு
- மலட்டுத் தன்மை நீங்கவும், கர்ப்பிணிப் பெண்களை பாதுகாக்கவும் சுகப் பிரசவம் வேண்டியும் நிகழ்த்தப்படும்.
- ஏழு மலட்டு ராணிகளுடன் தொடர்புடையது.

5) பஞ்ச பாண்டவர் வனவாசம்.

- பாரதக் கதையை மீள்நிகழ்த்திக் காட்டும் சடங்காகும்.
- பாண்டவர்கள் வேடமிட்டு வனவாசம் செல்வர்.
- வாள் மாற்றுச் சந்தியில் வாளை வீமன் தருமனிடம் இருந்து பெறுவார்.
- வாளைப் பெற்றதும் அவரே வனவாச காலப் பொறுப்பை எடுக்கின்றனர்.
- பஞ்ச பாண்டவர்களுடன் நேர்த்தியை நிறைவேற்றும் பொருட்டு மக்களும் இணைக்கின்றனர்.

agaram.lk